**கொட்டிக்காவத்தை முல்லேரியா பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொட்டிக்காவத்தை முல்லேரியா பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கொட்டிக்காவத்தை முல்லேரியா பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உரிய காலத்தில் விகிதாசாரத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களுக்காக ரூபா 26,507,478 ஆன பெறுமானத் தேய்விற்குப் பதிலாக ரூபா 37,276,334 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 10,771,856 அதிகரித்து பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். 2023 இன் நிதிக் கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 5,376,828 பெறுமதியான கட்டிடமொன்று அந்தக் கணக்கில் வரவு வைக்கப்படாமல் நடைமுறை வேலைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவழிக்க வேண்டிய கடன்பட்டோர் ரூபா 4,653,925 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு விடயமொன்றின் கணக்கின் பிரகாரம் மீதி ரூபா 9,998,590 ஆக இருந்த போதும் அதற்குரிய உபயோகப் பதிவேடுகள் / பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 9,951,054 ஆனமையால் கணக்குகளுக்கும் உபயோக பதிவேடுகள் / பட்டியல்களுக்கிடையே ரூபா 47,536 வேறுபாடு காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். 2023 இன் நிதிக் கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் பிரகாரம் மயான நிலங்கள் மற்றும் கல்லறைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் 128 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 05 மயான நிலங்கள் எல்லை நிர்ணயம் தீர்மானித்து சபைக்கு கையேற்று வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான மயான நிலங்களின் எல்லை நிர்ணய நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் சபைக்கு கையேற்பதற்காக பிரதேச செயலாளருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. உரிய அங்கீகாரம் கிடைத்தவுடன் சபைக்கு கையேற்ற பின்னர் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வர்த்தமானி செயற்பாடுகளையும் தாமதமின்றி நிறைவேற்றுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 67,206,396 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 75,111,696 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 |
| | ---------- | --------------- | ------------ | ------------- | -------------- | --------------- | ----------- | ------------ | ------------ |
| (i) | ஆதன வரியும் வரியும் | **69,331** | **50,221** | **50,087** | **55,201** | **60,000** | **53,428** | **43,050** | **60,673** |
| (ii) | வாடகை | **21,000** | **6,832** | **4,628** | **7,237** | **12,302** | **15,304** | **2,185** | **34,712** |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | **1,700** | **1,700** | **1,450** | **250** | **1,300** | **631** | **484** | **147** |
| (iv) | ஏனைய வருமானம் | **23,481** | **23,481** | **25,200** | **-** | **4,235** | **3,422** | **3,422** | **-** |
| | மொத்தம் | **115,512** | **82,234** | **81,365** | **62,688** | **77,837** | **72,785** | **49,141** | **95,532** |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **ஆதனவரி**<br>மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மற்றும் வரிப் பெறுமதி ரூபா 62,327,863 ஆகும். | இந்த ஆதனவரி நிலுவை மீதி 09 இல் அரசாங்கத்தின் 02 ஆதனங்களுக்கும், சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக அனுப்பப்பட்ட 01 ஆதனத்திற்கும், மிகுதி ஆதனங்களுக்காக பகுதி பகுதியாக மீதிகளைச் செலுத்துவதற்கும் தற்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பல வருடகாலம் முதல் அறவிட வேண்டியதாகக் காணப்படுகின்ற நிலுவை வருமானத்தை சேகரித்தலை விரைவுபடுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) **கடை வாடகை** சபைக்குரிய பழைய சந்தையில் அமைந்துள்ள 07 கடைகளிலும் மற்றும் வியாபரத் தொகுதியில் அமைந்துள்ள 109 கடைகளில் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவைக் கடை வாடகை ரூபா 25,303,157 ஆக இருந்ததுடன் அதில் ஆண்டின் போது சேரிக்கப்பட்ட அளவு ரூபா 3,495,288 ஆகும். | 2019 ஆம் ஆண்டில் புதிய கடை வாடகை திருத்தியதன் அடிப்படையில் வாடகையாளர்கள் இந்த வாடகையைச் செலுத்தாது புறக்கணித்திருந்தனர். 2021 வரை மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடுவதற்கும் 2022 ஆம் ஆண்டில் வாடகை மதிப்பீட்டில் 50 சதவீத தொகையை அறவிடுவதற்கும் 2023 ஆம் ஆண்டில் முழுமையான வாடகை மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடுவதற்கும் பொதுச் சபை தீர்மானித்திருந்தது. | கடை வாடகை செலுத்தாமல் புறக்கணிப்பவர்களின் கடைகளை மீள கையேற்றல் போன்ற மாற்று திட்டம் மூலம் நிலுவை கடைகளிலிருந்து வாடகை அறவிடுவதை விரைவுபடுத்துதல் வேண்டும். |
| (இ) **நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பிரனரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கிடைக்க வேண்டியிருந்த நிதிமன்றத் தண்டப்பணம் ரூபா 11,020,280 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 266,867,232 ஆகும். | பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணப் பதிவேடுகள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கோகிலவத்த மயான நிலத்தில் இரட்டை சுடலைக் கூடத்தை நிர்மாணித்தல் தொடர்பான உடன்படிக்கை ரூபா 49,998,655 தொகையில் 2021 பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2022 நவம்பர் 21 ஆம் திகதி வரையிலும் வேலைக்காக ரூபா 15,750,625 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் விலை கூறல்கள் கோரப்பட்டு செயற் திட்டத்தின் வேலை | 2022.11.21 ஆந் திகதி வரையில் ஒப்பந்தகாரருக்கு ரூபா 15,750,624 செலுத்தப்பட்டுள்ளது. முற்பணமாக செலுத்தப்பட்டுள்ள தொகையை மீண்டும் ரூபா 2,518,911 தொகை, ரூபா 1,958,380 தொகை, ரூபா 653,510 மற்றும் ரூபா 4,868,928 என | உடன்படிக்கையின் பிரகாரம் நியாயமாக அதிகரிப்பதற்கு கலந்துரையாடி இரு தரப்பினரும் இணக்கப்பாட்டிற்கு விரைவாக வந்து வேலையினை பூர்த்திசெய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி வேலைகள் மேற்கொள்ளப்படாதிருந்த போதும் செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட கடன் தொகைக்காக சபைக்கு மாதாந்தம் ரூபா 109,570 கடன் தவணை செலுத்தவேண்டி இருந்தது. | சபையினால் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் முதலாவது கொடுப்பனவு அறிக்கையின்படி ரூபா 5,600,000 தொகை சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்தக் கடன் பணத்திற்காக ரூபா 109,570 தொகை கடன் தவணைப் பணமாக செலுத்தப்பட்டிருந்தது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்காக சபையின் வருமானம் மற்றும் வேலைகள் பொது வசதிகள் மற்றும் காணி, கட்டிடம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது நிர்மாணம் கைத்தொழில், பொது வசதிகள் மற்றும் காணி, கட்டிடங்கள் தொடர்பாக முழுமையான உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட பணிகள் நிறைவேற்றாமையினால் அல்லது தேவை ஏற்படாமையினால் 18 மீண்டெழும் செலவின விடயங்களில் ரூபா 5,161,200 தொகையும், 11 மூலதன செலவின விடயங்களில் ரூபா 17,793,125 தொகையும் ஆன மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இல் அரச செலவினங்களை நிர்வகிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் நிதி ஏற்பாடுகளில் ஆகக்கூடிய பயனைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |